அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 1/89(111)

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
1994, மார்ச் மாதம் 15ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவு செய்யப்பெறும்
அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான லீவு-
தாபனவிதிக்கோவையின் xxx11 ஆம் அத்தியாயத்திற்குத்
திருத்தம்.

1988.01.05ஆந் திகதிய 1/89ஆம் இலக்கமும், 1991.04.23ஆந் திகதிய 1/89(1)ஆம் இலக்கமும் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கைகளினால் திருத்தப்பட்ட தாபனவிதிக்கோவையின் 2.3.4ஆம் பிரிவு மேலும் கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

"2.3.4 அவர் உள்ளூராட்சிச் சபையொன்றுக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படின் அரசாங்க சேவையில் அவர் வகித்த பதவியிலிருந்து விலகுமாறு அவர் கேட்கப்படமாட்டார். என்னும் உள்ளூராட்சிச் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகவும் அக் கூட்டங்களுடன் தொடர்பு பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காகவும், சேவையின் அவசர தேவைகளுக்கு ஆட்படுத்தப்பட்டு, மாதமொன்றுக்கு 03 நாட்களுக்குச் சமுகமளிக்காமைக்கு சம்பளத்துடனான லீவு அவருக்கு வழங்க வேண்டும்.

2. 1991.04.23ஆந் திகதிய 1/89(1)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் மற்றைய ஏற்பாடுகள் மாற்றமுறாமல் இருக்கும்.

ஒப்பம்: வை.பீ.புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.